# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற அவசரக் கூட்டம் 28.07.2022 ஆம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 11.மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைப்பெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டநடவடிக்கை பொருள்கள்

**பொருள் எண்.** 01

நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராம குடிநீர் திட்ட கோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களின் கடிதம் எண். 166-3/DPR.KKI & VPM CWSS/DO/RWS/KKI/2022, நாள். 13.07.2022ல்விழுப்புரம் மாவட்டத்தில் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள், 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 2108 கிராமங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 622 கிராமங்கள் ஆகியவற்றிற்கு, காவேரி ஆற்றிலிருந்து செயல்படுத்தப்படவுள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கதமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்டப்பிரேரனை சமர்பிக்க வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு 2024, 2039 மற்றும் 2054 ஆகிய மூன்று நிலையில் குடிநீர் தேவைப்படும் விவரங்களை (ஏற்கனவே வழங்கப்படும் குடிநீரினை தவிர்த்து) Annexure-Iல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கள்ளக்குறிச்சி நகராட்சி மக்கள் தொகை | | - | 52507 |
| 2. | தலைமை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வேலூர் அவர்களின் கடிதம் எண். F.KKI & VPM CWSS/AE4/VLR/2022, நாள். 04.04.2022ன்படி (எதிர்பார்க்கப்படும்) மக்கள் தொகை விவரம் (Forecast) பின்வருமாறு | | | |
| | a) | குடிநீர் வழங்க ஆரம்பிக்கும் வருடம் 2024 (Base Year) | - | 62132 |
| | b) | குடிநீர் வழங்கும் நடுப்பட்ட வருடம் 2039 (Intermediate Year) | - | 73237 |
| | c) | குடிநீர் வழங்கும் இறுதி வருடம் 2054 (Ultimate Year) | - | 84342 |

**கள்ளக்குறிச்சி நகராட்சியில் வழங்கப்படும் குடிநீரின் தற்போதைய விவரம்**

| | | | |
|---|---|---|---|
| a) | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ரிஷிவந்தியம் மற்றும் மணலூர்பேட்டை கூட்டுக் குடிநீர் திட்டங்களின் மூலம் தற்போது வழங்கப்படும் தினசரி குடிநீர் அளவு | - | 38.7782 இலட்சம் லிட்டர் |
| b) | 2011 மக்கள் தொகை 52507 பேருக்கு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு வழங்கப்படும் குடிநீர் அளவு | - | 74 LPCD |
| c) | 2024 மக்கள் தொகை 62135 பேருக்கு குடிநீர் வழங்கும் நிலையில் நபர் ஒருவருக்கு நாள் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு | - | 62.41 LPCD |
| d) | கள்ளக்குறிச்சி நகராட்சி பொதுமக்களுக்கு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு அளவுகோல்படி வழங்கப்பட வேண்டிய குடிநீர் அளவு | - | 135 LPCD |
| c) | கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு புதிய கூட்டு குடிநீர் திட்டத்தில் பழைய திட்டங்களின் மூலம் வழங்கப்படும் குடிநீர் போக மீதமுள்ள நபர் ஒருவருக்கு நாள் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய குடிநீர் அளவு (135 LPCD – 62.41 LPCD) | - | 72.59 LPCD |

**புதிய காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் இந்நகராட்சிக்கு தேவைப்படும் குடிநீர் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | 2024 ஆம் ஆண்டில் குடிநீர் தேவை (Base Year) | - | 63.13 இலட்சம் லிட்டர் |
| 2) | 2039 ஆம் ஆண்டில் குடிநீர் தேவை (Intermediate Year) | - | 81.27 இலட்சம் லிட்டர் |
| 3) | 2054 ஆம் ஆண்டில் குடிநீர் தேவை (Ultimate Year) | - | 99.41 இலட்சம் லிட்டர் |

எனவே, மேற்கண்ட காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட தேவைப்படும் குடிநீர் அளவுகளுக்கு மேற்கண்டவாறு கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு குடிநீர் தேவை என்பதை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராம குடிநீர் திட்டக்கோட்டம், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு ஒப்புதல் கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கான காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சி பொது மக்களுக்கு தற்போது ரிஷிவந்தியம், மணலூர்பேட்டை கூட்டுக் குடிநீர் திட்டங்களில்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் 38.7782 இலட்சம் லிட்டர் போக மீதம் தேவைப்படும் குடிநீர் நாள் ஒன்றுக்கு 2024 ஆம் ஆண்டில் 63.13 இலட்சம் லிட்டர், 2039 ஆம் ஆண்டில் 81.27 இலட்சம் லிட்டர் மற்றும் 2054 ஆம் ஆண்டில் 99.41 இலட்சம் லிட்டர் அளவிலான குடிநீர் வழங்க வேண்டும் என்ற தேவையையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1756 / 2022 / இ1)**

**பொருள் எண். 02**

கள்ளக்குறிச்சி நகராட்சி சொந்தமான துருகம் சாலையில் உள்ள மயானத்தில் நமக்கு நமே திட்டத்தின் கீழ் தியான மண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. எனவே இப்பகுதிக்கு வரும் பொதுமக்கள் வருகை புரிவதால் அவர்களுக்கு தேவையான தண்ணீர் வசதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகியுள்ளது. எனவே மேற்படி இடத்தில் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து Pvc பைப் மூலம் தண்ணிர் வசதி செய்ய பணிகள் மேற்கொள்ளலாம்.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2011 / 2022 / இ1)**

**பொருள் எண். 03**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20-ல் உள்ள ஏமப்பேர் பகுதியில் உள்ள நகராட்சி குளத்திற்கு கரியப்பா நகர் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரானது குளத்தின் நீர் ஆதாரமாக உள்ளது. தற்பொழுது ஏரியின் உபரி நீரானது முறையாக குளத்திற்கு வராமல் ஆங்காங்கே தடைப்பட்டு தண்ணிர் வீனாகி கொண்டிருப்பதால்

மேற்படி ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீர் வழி பாதையினை சரி செய்து ஏமப்பேர் குளத்திற்கு தங்கு தடையின்றி எடுத்து சென்று சேமிக்கும் வகையில் Rcc Hume Pipe அமைக்கவும்குளம் நிரம்பி உபரி நீரினை விளை நிளங்களுக்கு செல்லும் வகையில் தொட்டிகள் அமைக்க வேண்டியுள்ளது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 3,50,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2045 / 2022 / இ1)

**பொருள் எண்.    04**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20-ல் ஏமப்பேர் பகுதியில் நகராட்சி குளம் உள்ளது. இக்குளத்திற்கு அருகில் உள்ள பகுதிகளிலிருந்து வெளியேறும் கால்வாய் நீரானது இக்குளத்திற்கு செல்வதால் சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. இக்குளம் தற்சமயம் கலைஞர் நகர் புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்டு வருவதால் எதிர் வரும் காலங்களில் கழிவு நீர் குளத்தில் கலந்து மாசு அடைந்து வருவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தடுக்கவும் இக்கால்வாய் குளத்தின் உள்ளே வரும் முகப்பு பகுதியில் இருந்து மாற்று வாய்காலில் வெளியேரும் வகையில் குளத்தில் கழிவு நீர் கலக்காமல் இருக்க புதிய கால்வாய் அமைத்து வெளியேறும் வகையிலும் இக்குளத்திற்கு செல்லும் வகையில் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.9,25,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2043 / 2022 / இ1)

**பொருள் எண்.    05**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10-ல் மகாலட்சுமி நகர் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான கிணறு பழதடைந்த நிலையில் உள்ளது. மகாலட்சுமி நகர் மற்றும் MRN நகர் பகுதியில் நகராட்சி மூலம் விநியோகம் செய்யும் குடிநீரானது அப்பகுதி மக்களுக்கு போதிய அளவில் இல்லை என இப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வருகிறது.

மேற்படி பகுதியில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு மேற்படி குடிநீர் தட்டுபாட்டை சரி செய்ய இப்பகுதில் உள்ள நகராட்சி கிணற்றிலிருந்து எடுத்து இப்பகுதி பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் மோட்டர் மற்றும் குழுய்கள் அமைத்து குடிநீர் வழங்க அறிவுறுத்தப்பட்டது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 4,50,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2044 / 2022 / இ1

**பொருள் எண். 06**

**வேலையின் பெயர்:-**

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 15.07.2022 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

| வ. எண் | விபரம் | எண்கள் | ஸ்ரீகாமாட்சி அம்மன் இன்சினியரிங் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | செந்தூர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | ஸ்ரீ பன்னை அம்மன் டிரெய்லர் & இன்சினியரிங் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|---|
| 1 | பின்பக்கம் டயர் மாற்றுதல் | 1 எண்கள் | 620.00 | **598.00** | 600.00 |
| 2 | முன்பக்கம் டயர் மாற்றுதல் | 1 எண்கள் | 550.00 | **487.00** | 510.00 |
| 3 | பின்பக்கம் வீல் பேரிங் மாற்றுதல் | 1 எண்கள் | 515.00 | **490.00** | 520.00 |
| 4 | முன்பக்கம் வீல் பேரிங் மாற்றுதல் | 1 எண்கள் | 475.00 | **418.00** | 468.00 |
| 5 | சென்டர் பேரிங் | 1 எண்கள் | 495.00 | **488.00** | 490.00 |
| 6 | முன்பன்டிஸ் புதியதாக மாற்றுதல் | 1 எண்கள் | 375.00 | **355.00** | 365.00 |
| 7 | வீல் பிராக்கெட் | 1 செட் | 710.00 | **690.00** | 715.00 |
| 8 | வீல் சென்டர் பின் | 1 எண்கள் | 480.00 | **450.00** | 460.00 |
| 9 | வீல் டிஸ்க் | 1 எண்கள் | 620.00 | **600.00** | 610.00 |
| 10 | வீல் ஆக்சல் | 1 எண்கள | 1250.00 | **1200.00** | 1275.00 |
| 11 | வீல் ஆக்சல் போல்டு | 1 எண்கள் | 230.00 | **210.00** | 220.00 |

அலுவலக குறிப்பு:-

**1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2.**மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.**செந்தூர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சிஎன்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்**

3.**இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம்**

**அனுமதிக்கலாம்**.

**(ந.க.எண். 899 /2022/எச்1)**

பொருள் எண். 07

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான மைக்ரோ பேக்டிசைடு (Micro Bacticide) கிருமிநாசினிகள் சப்ளை செய்யும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 15.07.2022 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | அளவு | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | M/s. Sivasakthi Tradres, Namakkal | 1 லிட்டர் | 3290.00 |
| 2 | M/s. Shree Plasto Tech, Chennai | | 3400.00 |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Sivasakthi Traders, Namakkal என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியைஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1190 /2022/எச்1)

பொருள் எண். 08

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் மகளிர் சுயஉதவிக்குழுக்களான துர்கா சிக்கனம் மற்றும் நாணய கடன் சங்கம், ரோஜா மகளிர் சுயஉதவி குழு, மல்லிகை சிக்கனம் மற்றும் நாணய சங்கம் ஆகிய குழுக்கள் மூலமாக துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்ட 75 துப்புரவு பணியாளர்களுக்கு கடந்த செப்டம்பர் 2018 முதல் ஜீலை 2019 வரை பணிபுரிந்த காலத்தில் பணியாளர் வைப்பு நிதி என்ற தலைப்பில் செப்டம்பர் 2018 முதல் ஜீலை 2019 வரையிலான காலத்திற்கு மாத ஊதியத்திலிருந்து 13.36% என்ற விகிதத்தில் பிடித்தம் செய்யப்பட்டு, கணக்கு துவக்கப்படாத காரணத்தினால் உரிய தலைப்பில் செலுத்தப்படாமல் நாளது வரை நகராட்சி கணக்கில் ரூ. 1120069/- (ரூபாய் பதினொன்று இலட்சத்து இருபதாயிரத்து அறுபத்தி ஒன்பது மட்டும்) இருப்பதாகவும், மேற்கண்ட குழு சார்ந்த உறுப்பினர்களுக்கு வருங்கால வைப்பு நிதி கணக்கு தனித்தனியே துவக்கப்பட்டு உள்ளதாகவும், எனவே நிலுவையில் உள்ள செப்டம்பர் 2018 முதல் ஜீலை 2019 வரை உள்ள காலத்தில் நிலுவையாக கீழ்க்கண்ட அட்டவனையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரப்டி தொகை ரூ. 1120069/- ஐ திரும்ப வழங்க வேண்டும் என மேற்கண்ட சுயஉதவிகுழுக்கள் கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின்

பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குழுவின் பெயர் | பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு நிதி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | துர்கா சிக்கனம் மற்றும் நாணய கடன் சங்கம், கள்ளக்குறிச்சி | ரூ. 355670/- |
| 2 | ர ஜா மகளிர் சுய உதவி குழு, கள்ளக்குறிச்சி | ரூ. 386333/- |
| 3 | மல்லிகை சிக்கனம் மற்றும் நாணய சங்கம், கள்ளக்குறிச்சி | ரூ. 378066/- |
| மொத்தம் | | ரூ.1120069/- |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பிடித்தம் செய்த தொகையினை திரும்ப நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2456 /2018/எச்1)

**பொருள் எண்.** 09

நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.79 நாள்:-02.06.2022 ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நகரப்பகுதியில் தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் என்ற திட்டத்தினை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் நகரப்பகுதியில் ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை மற்றும் 4வது சனிக்கிழமைகளில் 6 அம்ச திட்டங்களான ஒட்டு மொத்த துப்புரவு பணி, குப்பைகளை தரம் பிரித்தல், நுண்உரமையத்தில் உரம் தயாரிக்கும் பணியினை பள்ளி மாணவர்களுக்கு பார்வையிட செய்தல், மீண்டும் மஞ்சப்பை, பள்ளி மாணவர்கள், மகளிர் சுயஉதவிகுழுக்கள் மற்றும் பொது மக்களுக்கு பேச்சு போட்டி, கட்டுரை போட்டி நடத்துதல், நீர் நிலைகளில் உள்ள குப்பைகளை அகற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு என் குப்பை என் பொறுப்பு என்ற உணர்வினை மக்கள் மனதில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள், மற்றும் சில்லறை செலவினங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/- லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி அவ்வப்போது பெறப்படும் சில்லறை பட்டியல் தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம்

அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1541/2022/H1)

**பொருள்.10**

இந்நகர்மன்ற தீர்மான எண்.284 நாள்:-17.11.2021 ல் கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவில் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து மக்காத குப்பைகளான மறுசுழற்சிக்கு பயன்படுத்தப்படாத பிளாஸ்டிக் கழிவுகளை சேகரம் செய்யப்பட்டு அதனை அரியலூர் சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், அவ்வாறு சிமெண்ட் நிறுவனத்திற்கு மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை பண்டல் செய்து அதனை எடைபோட்டு கணக்கீடு செய்வதற்கும், அவ்வப்போது பொது சுகாதார பிரிவிற்கு தேவையான ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், புக் பைண்டிங் மற்றும் இதர பணிகளுக்கு சில்லறை செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. மேற்கண்ட பணிகளுக்கு தற்போது தொகை ரூ.40387.00 செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் கூடுதல் உத்தேச செலவினம் ரூ.200000/- (இரண்டுஇலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி அவ்வப்போது பெறப்படும் சில்லறை பட்டியல் தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2411/2021/H1)

**பொருள் எண். 11**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதியிலும் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிக்கு இந்நகராட்சியின் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்ட 27 எண்ணிக்கையிலான மின்கலஊர்தி (BOV) வாகனங்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாகனங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் முதல்நிலை சேகரம் செய்யும் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. இவ்வாகனங்களுக்கு பராமரிப்பு பணிக்கு செலவினம் அதிகம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட BOV மின்கல ஊர்தி வாகனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மூலம் மேற்கொள்வதால் வாகனம் அனைத்தும் நல்லநிலையில் செயல்படும் என்பதை கருத்தில் கொண்டு இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள 27 மின்கலஊர்தி வாகனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2989/2021/H1)

**பொருள் எண். 12**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்17-ல் அண்ணா நகர் பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய் தென்கீரனூர் கிராமம் வரை சென்றடைகிறது. தற்பொழுது இக்கால்வாயில் முறையாக கழிவு நீர் செல்லாமல் பாதைகளில் அடைப்பு ஏற்பட்டு தென்கீரனூர் கிராம எல்லையில் சாலைகளில் தேங்கியுள்ளது. மேலும் மழைக்காலங்களில் இச்சாலை முழுவதும் தண்ணீர் தேங்கி சாலைகள் மிகவும் சேதமைடைகிறது. எனவே இதனை தடுத்திடும் வகையில் சாலைகளின் குறுக்கே சிறுபாலம் அமைத்து நீர் வழி பாதையினை சரிசெய்ய வேண்டியுள்ளது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2050 / 2022 / இ1)

**பொருள் எண். 13**

**வேலையின் பெயர்**:- கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தெருக்களில் சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 19.07.2022 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | திருவாளர்கள் | எண்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | **ஆர்.வேல்முருகன், கள்ளக்குறிச்சி** | **1 எண்கள்** | 360.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | கி.சிலம்பரசன்<br>கள்ளக்குறிச்சி | 1 எண்கள் | 380.00 |
| 3 | எஸ்.எம்.விஷ்ணு உபன் நிசாந்த்<br>கள்ளக்குறிச்சி | 1 எண்கள் | 400.00 |

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ஆர்.வேல்முருகன்,கள்ளக்குறிச்சிஎன்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்**

3.**இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண். 992 /2022/எச்1)

**பொருள் எண். 14**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10-ல் மகாலட்சுமி நகர் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான கிணறு உள்ளது.இக்கிணறு பல ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் உள்ளது.இதனால் இக்கிணற்றில் குப்பைகள் நிரைந்தும் அருகில் உள்ள பகுதிகளிலிருந்து கழிவு நீர் கலந்தும் பழுதடைந்து சுகாதாரமற்ற முறையில் உள்ளது.

மேற்படி இடத்தை நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டு எதிர் வரும் காலங்களில் இக்கிணறு நீரை இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன் படுத்தி பயன் பொறும் வகையில் தூர்வாரியும் சுற்றுச்சுவரில் கான்கிரிட் மூலம் பலப்படுத்தவும் பாதுகாப்பு நலன் கருதி சுற்று சுவர் மற்றும் தேவையானவசதிகள் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூராயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2048 / 2022 / இ1)

**பொருள் எண். 15**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு,நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் (MPLADS) 2021-2022ன் கீழ், கீழ்க்காணும் பணியினை ரூ. 12.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க. ஆ5/780/2022, நாள். 18.07.2022ல் நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்டஏமப்பேர் பேருந்து நிறுத்தத்தின் மேற்குப்புறம் புதியதாக நிழற்குடை அமைத்தல் | ரூ. 12,00,000/- |
| மொத்தம் | | ரூ. 12,00,000/- |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட பணிக்கு மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம். வேலூர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணி முடிக்கப்பட்ட பின்னர் பட்டியல் படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1396 / 2022 / இ1)

**பொருள் எண். 16**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தினசரி சேகரமாகும் 12-டன் மக்கும் குப்பைகளை நுண்ணுயிர் செயலாக்கம் முறையில் (MCC) உரமாக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதில் சேகாரமாகும் மக்கும் குப்பைகளை அறைத்து இலகுவாக்கும் Shredder இயந்திரம் முக்கிய பணியாற்றி வருகிறது. இவ்வியந்திரம் பழுது ஏற்படும் பொழுது குப்பைகள் தேக்கமடைந்து சுகாதாரகேடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே நகராட்சியில் உள்ள மூன்று இடங்களில் உள்ள இயந்திரங்களை (Shredder, Motor, Conveyor Belt மற்றும் Stater)களை தடையின்றி செயல்பட வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2047 / 2022 / இ1)

**பொருள் எண். 17**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்கட்பட்ட 21 வார்டுகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட தெருவிளக்கு மின் இணைப்புகள் மீட்டர் பாக்ஸ்கள் உள்ளது. இவற்றில் பல மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவற்றினை

தினமும் ON/OFF பயன்படுத்தும் ஊழியர்களுக்கு ஆபத்தாகவும், மழைக்காலங்களில் அபாயமாகவும் விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. எனவே இவற்றினை மாற்றி புதிய Powder coated box ஆக மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 4,50,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2049 / 2022 / இ1)

பொருள் எண் 18

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்தரவு மூ.மு.எண்.25032/2018/பி3 நாள்:-24.10.2018ல் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 124 தூய்மை பணியாளர்களை விநியோகம் செய்ய (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, கடந்த 01.08.2019 முதல் 31.07.2022 வரை M/s.கிரீன் வாரியர் சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு நாளது வரை நகராட்சி பகுதியில் தூய்மைபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், எதிர்வரும் 31.07.2022 உடன் மேற்கண்ட தூய்மை பணிகளின் ஒப்பந்தகாலம் முடிவடைவதால், பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தினர் மூலமாக மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பபட்டுள்ளது. மேற்கண்ட தூய்மை பணிக்கு மூன்று காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதிய விகிதத்தில் நீட்டிப்பு செய்ய அறிவுரை வழங்கியதையடுத்து மூன்று மாத்தத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.60.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் 01.08.2022 முதல் 31.10.2022 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2456/2018/எச்1)**

பொருள் எண்19

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்1-ல் உள்ள அம்மன் நகர் மற்றும் மருதப்பிள்ளை நகர் ஆகிய பூங்காகளில் தமிழ்நாடு நகர்புற வேலைவாய்ப்பு திட்டம் 2021-2022ன் கீழ் நடைபாதையுடன் கூடிய பசுமைப்பூங்கா அமைக்கும் பணிகள் நடைப்பெற்று வருகிறது. மேற்படி பூங்காகளில் மரக்கன்றுகள், நடைபாதைகள் மற்றும் சுற்று வேலி ஆகியவை அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மரக்கன்றுகளுக்கு தேவையான தண்ணிர் வசதிகள் இல்லாமல் உள்ளது எனவே இப்பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங் மூலம் குழாய்கள் பதித்து தண்ணிர் வசதி செய்து பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேலும் அப்பகுதியில் பரவலாக அமைந்துள்ள குடியிருப்பு வாசிகளும் எதிர் வரும் காலத்தில் அப்பகுதியில் உருவாக உள்ள குடியிருப்புகளுக்கும் இக்குடிநீர் பணி அவசியாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 1,60,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஆறுபதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2055 / 2022 / இ1)

**பொருள் எண் 20**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 எண்ணிக்கையில் அமைந்துள்ள சமுதாய கழிவறைகள் முறையான பராமரிப்பு இல்லாததால், கட்டடம், தண்ணீர் குழாய்கள், மின் உபகரணங்கள் அனைத்தும் அடிக்கடி பழுது ஏற்பட்டு கழிவறையினை மக்கள் தொடர்ந்து உபயோகபடுத்த இயலாத நிலை ஏற்பட்டு, நகராட்சி மூலம் பராமரிப்பு பணிகள் ஒவ்வெரு வருடமும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அதிகமான நிதிசுமை நகராட்சிக்கு ஒவ்வொரு வருடமும் தேவைப்படுவதால், நகராட்சியிலிந்து செலவினம் மேற்கொள்ளப்பட இயலாதல் கழிவறைகளை பராமரிப்பு பணிகளில் சுணக்கம் ஏற்பட்டு பொதுமக்கள் சமுதாய கழிவறைகளை பயன்படுத்த இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது.

எனவே, இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சமுதாய கழிவறைகளை அந்தந்த பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களில் உள்ள மாற்று திறனாளிகள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோர்களிடத்தில் ஒப்படைப்பு செய்து, அவர்கள் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கழிவறைகளை பராமரிப்பு செய்ய ஒப்படைக்கப்படும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அக்கழிவறைகளை பயன்படுத்தும் அப்பகுதிகளில் உள்ள சுமார் 50 முதல் 100 குடும்பங்களுக்கு டோக்கன்கள் விநியோகம் செய்து, ஒவ்வொரு குடும்பத்தினரிடமிருந்தும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, ரூ. 150/- மாதம் ஒன்றிற்கு பெற்றுக்கொண்டு பராமரிப்பு மேற்கொள்ள முடிவு செய்யலாம் என ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்முறை மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் போது, இத்திட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரும் வரை நகராட்சி மூலம் ஒவ்வொரு கழிவறையையும் பராமரிப்பு மேற்கொள்ள மேற்படி சுய உதவிக் குழு உறுப்பினருக்கு, மாதம் ஒன்றிற்கு, கழிவறை ஒன்றுக்கு ஆதார ஊக்க தொகையாக ரூ. 1500/- வழங்கவும் முடிவு செய்யலாம் என ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி கழிவறைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் சுய உதவிக்குழு உறுப்பினர் கழிவறைக்கான தண்ணீர் ஏற்றும் பணி, கழிவறைகளை கிருமிநாசினிகள் தெளித்து சுத்தம் செய்யும் பணி, நகராட்சி மூலம் பொருத்தப்படும் நாப்கின்கள் போன்ற பொருட்களை எரிக்கும் Incinerator மற்றும் இதர உபகரணங்களை பயன்படுத்தி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பணிகள் போன்றவற்றையும் செய்து கொள்ள வேண்டும். மேலும், கழிவறைகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பாக பராமரிக்க வேண்டும். கழிவறைகளுக்கு வரப்பெறும் மின் கட்டணம் பராமரிப்பாளரே செலுத்தி கொள்ள வேண்டும். பராமரிப்பு மேற்கொள்ளும் கழிவறைகளில் செப்டிக் டேங்க் நிரம்பும் பட்சத்தில் சுத்தம் செய்தல் பணி மட்டுமே நகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட முறையில் நகராட்சி பகுதிளில் உள்ள ஒவ்வொரு சமுதாய கழிவறைகளின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தகுதியான மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவரை தேர்வு செய்து அவர்களிடம் இந்நகராட்சி நிர்வாகத்தின் நிபந்தனைகளுடன் ஒப்படைப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சமுதாய கழிவறைகளை அப்பகுதிகளை சேர்ந்த பதிவு பெற்ற மகளிர் சுய உதவிக் குழு மாற்று திறனாளி, விதவை, கணவனால் கைவிடப்பட்டவர் போன்ற உறுப்பினர்கள் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் உறுப்பினர் அப்பகுதியில் 50 முதல் 100 குடும்பங்களுக்கு டோக்கன் விநியோகம் செய்து, மாதம் ஒன்றிற்க்கு பராமரிப்பு கட்டணமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 150/- வீதம் வசூல் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் உறுப்பினருக்கு ஆதார ஊக்க தொகையாக நகராட்சி மூலம் மாதம் ஒன்றிற்கு, கழிவறை ஒன்றுக்கு ரூ. 1500/- வீதம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
5. பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் உறுப்பினர் கழிவறையை சரியாக பராமரிக்காத சூழ்நிலையில் வேறு தகுதியான நபர்களுக்கு கழிவறையை ஒப்படைப்பு செய்து பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2056 / 2022 / இ1)

**பொருள் எண் 21**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10ல் விநாயகா நகர் பகுதியில் அமைந்துள்ள வடிகாலில் மழைநீர் முறையாக வெளியேறுவதற்கு (Disposal Point) ஏற்ப இல்லாமல் உள்ளதால், மழைக்காலங்களில், ஆங்காங்கே மழைநீர் சாலையில் தேங்கி, சாலைகள் பழுதடையும் நிலை ஏற்படுகிறது. மேலும், தேங்கியுள்ள மழைநீரினால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே, இதனை தவிர்த்திடும் விதமாக, தேங்கியுள்ள மழைநீரினை அருகில் உள்ள ஏரி வாய்க்காலில் வெளியேற்றிடும் வகையில், அப்பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் மழைநீர் சேகரிக்கும் தொட்டி அமைத்து, மின் மோட்டார் பொருத்தி, குழாய்கள் மூலம் தண்ணீரினை வெளியேற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, துருகம் சாலை விநாயகா நகர் பூங்கா இடத்தில் மழைநீர் சேகரிக்கும் தொட்டி, மின் மோட்டார், குழாய்கள் மற்றும் இதர அமைப்புகள் ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூராயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2058 / 2022 / இ1)**

**பொருள் எண் 22**

எதிர்வருகின்ற 75 வது சுதந்திர தின விழாவினை சிறப்பாக நகராட்சி பகுதிகளில் தேசிய கொடி ஏற்றி கொண்டாடும் ஒரு பகுதியாக சுதந்திர வார 2022 ஆகஸ்டு 11 முதல் 17 தேதி வரை **சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா** என்ற தலைப்பில் கொண்டாடுவதற்கு **அரசாணை எண் 172 சுற்றுலா , கலாச்சாரம் மற்றும் மத நல்லிணக்க துறை நாள் 14.07.2022 ன்படி விழா ஏற்ப்பாடாக** அனைத்து அரசுக்கட்டிடங்கள் , தனியார் கட்டிடங்கள் மற்றும் நகரில் உள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடியினை ஏற்றுவதற்கு முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்க் கொள்ளுவதற்கும் பெருமளவு பொதுமக்களிடம் தேசிய 75 வது சுதந்திர தின விழா கொண்டாடுவது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளபடி அனைத்து வீடுகளிலும், தேசியக்கொடி ஏற்றுவதற்கும், அரசாணையில் தெரிவித்துள்ள விலை விகிதத்தில் தேசிய கொடிகளை தயார் செய்து வழங்குவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் சுதந்திர தின சுவர் விளம்பரங்களை செய்வதற்கும், இதர விழா ஏற்பாடுகளை செய்வதற்கும் ஆகும். ஆகிய பணிகளை மேற்கொள்ள ஏற்படும் செலவினம் ரூ.500000/–க்கு மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2060 / 2022 / இ1)**

**பொருள் எண்.** 23

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14-ல் அமையப்பெற்ற அரசு ஆண்கள் மாணவர் விடுதி பின்புறம் விளாந்தாங்கல் ஏரியிலிருந்து சீரான முறையில் தண்ணீர் வராமல் உள்ளது. எனவே, அதனை தவிர்த்திடும் வகையில் விளாந்தாங்கல் சாலை நடுத்தெருவில் ஒரு புதிய ஆழ்துளை கிணறு, மின் மோட்டார் பொருத்தி அதிலிருந்து குழாய் அமைத்து அதனை பிரதான குடிநீர் குழாயில் இணைத்து தண்ணீர் தட்டுப்பட்டை சரிசெய்து தரக்கோரி 14-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2012 / 2022 / இ1)

**பொருள் எண்.** 24

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19-ல் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள கோரி, 19-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. கள்ளக்குறிச்சி நகராட்சி வார்டு எண் 19-ல் ஏமப்பேர் ஏரிக்கரையில் உள்ள கிணற்றின் மேல் மூடி அமைத்து தர கோரியுள்ளார்.
2. விஜயலட்சுமி நகர் பகுதியில் பிரதான குடிநீர் குழாய் அமைத்தல்

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1861 / 2022 / இ1)

**பொருள் எண். 25**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08, சிறுவங்கூர் சாலை 3-வது குறுக்குத் தெருவில் (மேற்கு பகுதி)அமைந்துள்ள சிறிய குடிநீர் தொட்டி அப்பகுதியில் உள்ள குடியிருப்புக்கு இடையூறாக உள்ளதால், அந்த சிறிய குடிநீர் தொட்டியினை வேறு இடத்திற்கு மாற்றி அமைத்துத்தரக் கோரி, 08-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1980 / 2022 / இ1)**

**பொருள் எண். 26**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10ல் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள கோரி 10-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விவரம் |
|---|---|
| 1. | புத்து மாரியம்மன் கோவில் குறுக்குத் தெருவில் சிறுபாலம் கட்டுதல் |
| 2. | சுந்தர விநாயகர் கோவில் தெரு தம்பி லேத் ஒர்க்ஸ் அருகில் G.I. குழாய் விஸ்தரிப்பு செய்தல் |

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.** 27

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12ல் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள கோரி 12-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விவரம் |
|---|---|
| 1. | வார்டு எண். 12ல் உள்ள அனைத்து கழிப்பிடங்களை மராமத்து பணி செய்தல் |
| 2. | கிராம நிர்வாக அலுவலகம் முன்புறம் உள்ள அரசாண் கிணற்றினை நிரந்தரமாக மூடுதல் |
| 3. | தந்தை பெரியார் நகர் மற்றும் திருவள்ளுவர் தெருவில் G.I. குழாய் விஸ்தரிப்பு செய்தல் |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1987 / 2022 / இ1)**

**பொருள் எண்.** 28

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரை 89க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்ச்ர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பகுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2070 / 2022 / இ1)**

**பொருள் எண். 29**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் விரிவாக்கம் / விஸ்தரிப்பு செய்யப்பட்ட பகுதிகளில், ஏற்கனவே இந்நகராட்சியின் மூலம் தெரு மின் விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டு, மின் விளக்குகள் பொருத்தப்படாமல் உள்ளது. எனவே, ஏற்கனவே தெருமின் விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டு மின் விளக்குகள் இல்லாத பகுதிகளில் புதியதாக தெருமின் விளக்குகள் அமைப்பதற்கும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)-க்கும்,மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2071 / 2022 / இ1)

**பொருள் எண். 30**

கள்ளக்குறிச்சி நகராட்சி 21 வார்டுகளை உள்ளடக்கி 15.87 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நகராட்சியில் புதியதாக மனைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு தெருமின் விளக்குகள் இல்லாமல் அப்பகுதிகளில் இருளில் சூழ்ந்த நிலையில் உள்ளது. இதனால் பலவித அசம்பாவித செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளதால், விரிவாக்கம் மற்றும் விஸ்தரிப்பு செய்யப்பட்ட பகுதிகளில் புதியதாக தெருமின் விளக்குகள் அமைப்பதற்கு, தெருமின் விளக்கு கம்பங்கள் இல்லாத பகுதிகளில் புதியதாக தெருமின் கம்பங்கள் மற்றும் மின் கம்பங்கள் உள்ள பகுதிகளில் தெருமின் ஒயர்கள் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விரிவாக்கம் / விஸ்தரிப்பு செய்யப்பட்ட பகுதிகளில் புதிய தெருமின் விளக்குகள் அமைப்பதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடமிருந்து பெறப்படும் கேட்பு பட்டியலின் அடிப்படையில் தொகையினை செலுத்திடவும், தெருமின் விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்ட பின்னர் அதில் தெரு மின் விளக்குகள் பொருத்திடவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/- ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)-க்கும், மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2072 / 2022 / இ1)

**பொருள் எண்.** 31

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 09ல் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள கோரி 09-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களால் கொடுத்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விவரம் |
|---|---|
| 1. | ஞானம்பாள் நகர் மற்றும் திருவரங்கம் நகர் பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் |
| 2. | கருணாபுரம் புதிய காலனி சிறுவர் பூங்காவின் சுற்று சுவர் பழுதடைந்துள்ளதை புதியதாக சுற்று சுவருடன் கூடிய கேட் அமைத்தல் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு உரிய மதிப்பீடுகள் தயார் செய்து முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2073 / 2022 / இ1)**

**பொருள் எண்.** 32

கள்ளக்குறிச்சி நகராட்சி வார்டு எண்.15-ல் சேலம் பிரதான சாலையில் மணிகூண்டு அருகில் நகராட்சி சிறுநீர் கழிப்பிடம் உள்ளது. இக்கட்டடம் பல ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் கட்டடத்தின் சுவர்பகுதிகள் சிதலமடைந்து கழிவுநீர் செல்ல இயலாமல் தேங்கி சுகாதாரகேடு ஏற்படும் நிலையில் உள்ளது. இப்பகுதியை நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர்கள் நேரில் ஆய்வு செய்து அவற்றின் சுற்றுசுவர், கழிவுநீர் வெளியேறும் வகையில் அமைத்தல், தண்ணிர் வசதி மற்றும் முன்புறம் கேட் அமைத்து பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சீரமைக்க அறிவுத்தினர்.

எனவே, மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2091/2022/இ1)**

**பொருள் எண். 33**

கள்ளக்குறிச்சி நகராட்சி கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தலைநகரில் அமைந்துள்ள நகராட்சி ஆகும். கள்ளக்குறிச்சி நகராட்சி சுற்று பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களை ஒன்றினைக்கும் மையப்பகுதியாக அமைந்துள்ளதாகும், இந்நகர் பல்வேறு கிராமபகுதிகள், நகர்பகுதிகள் மற்றும் மாவட்டங்களை இணைக்கும் பிரதான பகுதியாகவும் உள்ளதாலும் மக்கள் அதிகளவில் நகர் பகுதிக்கு பல்வேறு வசதிகளை பெற நகருக்கு வந்து செல்வதாலும் அதிகளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் நகரின் முக்கிய சாலைகளான பேருந்து நிலையம் நான்கு முனை சந்திப்பு முதல் சேலம் புறவழிசாலை வரையிலும் மற்றும் பேருந்து நிலையம் நான்கு முனை சந்திப்பு முதல் துருகம் சாலை நகராட்சி உரக்கிடங்கு வரை(NHAI) தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையாக உள்ளது. இச்சாலைபகுதிகளில் சேலம் பிரதான சாலையில் இருபுறங்களிலும் வடிகால் வசதி இல்லாமலும், துருகம் சாலையில் தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் வசதி இல்லாமலும் உள்ளது. எனவே இதன் காரணமாக மழைக்காலங்களில் மழைநீர் வெளியேற வழி இன்றி சாலையில் தேங்கிவருவதன் காரணமாக சுகாதாரகேடுகள், மழை நீரினால் மண் அடித்துவரப்பட்டு சாலை பகுதிகளில் தேங்கி அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது. மேலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்களுக்கு பெருமலவில் இடையூறு ஏற்படுகின்றது. இப்பிரதான சாலைபகுதிகளில் மழைநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படுவதை தடுக்கவும் சாலையில் மண் மேடு உருவாகி வாகனம் ஓட்டுபவர்களுக்கு இதன் காரணமாக அடிக்கடி ஏற்படகூடிய விபத்துகளை தடுக்கவும், மழைநீர் வடிகால் வசதிகள் அமைக்க வேண்டி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கிறது. எனவே மேற்கண்ட இடர்பாடுகளை தடுத்திடும் வகையில் மேற்படி பிரதான சாலை பகுதிகளில் வடிகால் வசதிகள் அமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேலும் இச்சாலை (NHAI) தேசிய நெடுஞ்சாலைகள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் தேசிய நெடுஞ்சாலை துறையின் (NHAI) மூலம் மழைநீர் வடிகால் வசதி அமைத்து தர வேண்டி தெரிவிக்கலாம். தேசிய நெடுஞ்சாலை துறையின் மூலம் மழைநீர் வடிகால் வசதி அமைக்க இயலாத பட்சத்தில் நகராட்சியின் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள தடையில்லா சான்று (Noc) வழங்க கோரி தேசிய நெடுஞ்சாலை துறைக்கு கடிதம் அனுப்பி உரிய அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ளளாம் என்பதனை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தேசிய நெடுஞ்சாலை துறையின் (NHAI) மூலம் மழைநீர் வடிகால் வசதி அமைக்க கோரியுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியினை தேசிய நெடுஞ்சாலை துறையின் (NHAI) மூலம் செய்ய இயலாத பட்சத்தில் தேசிய நெடுஞ்சாலை துறையின் (NHAI) தடையில்லா சான்று (Noc) பெற்று உரிய மதிப்டு தயார் செய்து அரசுக்கு திட்ட பிரேரணை அனுப்பி பணிக்கான நிதியினை அரசு முழு மான்யமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2090/2022/இ1)**

**தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது, நாள்.28.07.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

ஒம் (xxxxxxxxxxxx)

**திரு.இரா.சுப்ராயலு,**

**// உண்மை நகல்//** நகர்மன்ற தலைவர்

கள்ளக்குறிச்சி நகராட்சி

**ஆணையாளர்**

**கள்ளக்குறிச்சி நகராட்சி**